## சேலம், வேளாண்மை இணை இயக்குநர் அவர்களின் செயல்முறைஆணை

முன்னிலை: திரு.க.கணேசன், எம்.எஸ்ஸி(விவ).,

செமு.ஆஎண்.அ2/13446/2017 நாள் 08.07.2021

பொருள் : பணிக்குழு–தமிழ்நாடு வேளாண்மை சார்பு பணி – கருணை அடிப்படையில் தற்காலிக பணியமர்வில் இளநிலை உதவியாளர் (பிணையம் அற்றது) ஆக பணி நியமனம் செய்யப்பட்டது– திரு.ஆர்.ரவிக்குமார், இளநிலை உதவியாளர் பணியிடத்தில் பணிவரன்முறை செய்து ஆணையிடல்.

பார்வை 1) வேளாண்மை இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்.அநிபி6/95801/18 நாள் 01.10.2018

2) இவ்வலுவலக செயல்முறை ஆணை எண். அ2/13446 /2017 நாள்15.10.2018

3) வேளாண்மை இயக்குநர், சென்னை அவர்களின் கடித எண். அநிபி1/9576/2020 நாள் 21.04.2021

4) அரசாணை (நிலை) எண்.48 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1)த் துறை நாள் 26.02.2021

5) அரசாணை (நிலை)எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1)த்துறை நாள் 23.01.2020

-----

ஆணை:

இவ்வலுவலக கட்டுப்பாட்டில் நங்கவள்ளி, வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் உதவி வேளாண்மை அலுவலர் ஆகப் பணிபுரிந்து வந்த போது 24.04.2011 அன்று அமரரான ஆர்.ராமலிங்கம் என்பவரின் வாரிசு/மகன் திரு.R.ரவிக்குமார் அவர்களுக்கு பார்வை (1)ல் காணும் சென்னை, வேளாண்மை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்து, சேலம் வேளாண்மை இணை இயக்குநர் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டதை தொடர்ந்து, பார்வை (2)ல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையின்படி திரு.R.ரவிக்குமார் அவர்களுக்கு சங்ககிரி, வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளர்(பிணையம் அற்றது) ஆக பணி நியமனம் ஆணை வழங்கப்பட்டது.

Scanned with CamScanner

அதனை தொடர்ந்து திரு. R.ரவிக்குமார் , இளநிலை உதவியாளர் (பிஅ) ஆக சங்ககிரி வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் 22.10.2018 முற்பகல் பணியில் சேர்ந்து கொண்டார்.

பார்வை (3)ல் காணும் வேளாண்மை இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தில் பார்வை 4ல் காணும் அரசாணையில் 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு எவ்வித தளர்வுமின்றி (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்குவிலக்கு (Exemption of Government Orders) தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணி நியமனமும்நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு, ஒருநிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள்(One level Higher than the appointing authority) அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசு பணியாளரின் பணியினை வரன்முறை செய்திட வேண்டும் என தெரிவிக்கப்பட்டு கருத்துரு திரும்ப பெறப்பட்டது.

அதனை தொடர்ந்து பார்வை 4 மற்றும் 5ல் காணும் அரசாணையில் வழங்கப்பட்டுள்ள வழிகாட்தலின்படி திரு. R.ரவிக்குமார் , இளநிலை உதவியாளர் (பிஅ) வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், சங்ககிரி அவர்கள் பணியில் சேர்ந்த நாளான 22.10.2018 முற்பகல் முதல் பணியினை வரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

மேலும் இவருக்கு தகுதிகாண் பருவம் முடித்து ஆணையிடப்பட்ட பின்னரே இரண்டாவது மற்றும் அதனை தொடர்ந்து வரும் ஊதிய உயர்வுகள் பெற தகுதியுடையவராகிறார்.

(ஒம்) க.கணேசன்,
வேளாண்மை இணை இயக்குநர்,
சேலம்.

பெறுநர்

திரு. R.ரவிக்குமார்.
இளநிலை உதவியாளர்(பிணையம் அற்றது)
சங்ககிரி.

வழி மற்றும் நகல்–வேளாண்மை உதவி இயக்குநர், சங்ககிரி.

நகல்– அ2 செயல்முறை ஆணைகோப்பு
நகல்–பணிப்பதிவேட்டிற்கு
நகல்–உபரி–1
நகல்–இருப்புகோப்பு அ2

//உத்தரவுப்படி//

Scanned with CamScanner